36

# நாவலர் இருவர்

ஆறுமுக நாவலர் கல்வி கற்கும் பிள்ளைகளுக்குக் கருவி நூலுணர்ச்சியும் சமய நூலுணர்ச்சியும் ஊட்டத்தக்க நூல்களை அச்சிடுவதற்கு அச்சியந்திரத்தைக் கொண்டு வருவதற்கு 1849 ஆம் ஆண்டு ஆடி மாதம் சென்னைப் பட்டணம் சென்றார். சென்றவர் திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்தார். அங்குச்சைவ சித்தாந்த பொருள் பற்றி அவர் செய்த பிரசங்கத்தைக் கேட்ட திருவாவடுதுறை ஆதீனத்து உபய சந்நிதானங்களும், மற்றைய வித்துவான்களும் அவரது வாக்கு வல்லபத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கினர். அச்சகம் வாங்கச் சென்றவர் ஆறுமுகநாவலராக அச்சுக்கூடத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினார். அன்றிலிருந்து நாவலர் என்பது ஆறுமுகநாவலரையே குறித்து வந்தது. நாவலரை முன்மாதிரியாகக்கொண்டு அவரது வாழ்வை அடியொற்றித் துறவு பூண்டு தமிழுக்கும் இந்து சமயத்துக்கும் தொண்டாற்றியவர் விபுலானந்த அடிகள். இதனால் இவரைக் கிழக்கிலங்கையின் ஆறுமுகநாவலர் என்பர். இவரை ஆறுமுகநாவலரின் மறுபிறவியாகக் கொண்டு விபுலானந்த நாவலர் என்று அழைப்பதுமுண்டு. அம்மரபினை அடியாகக் கொண்டு ஆறுமுக நாவலருக்கும் விபுலானந்த நாவலருக்கும் உள்ள ஒப்புமையை மதிப்பீடு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆறுமுக நாவலரிடத்து விபுலானந்த அடிகளாருக்கிருந்த மதிப்பினை நாவலர் மீது அவர் பாடிய நாவலர் மெய்க்கீர்த்திமாலை என்னும் நூலிலிருந்து அறியலாம். அந்நூலில் "ஈழநாட்டின் இணையிலாப் பெருநிதி யனையார்" என்றும் "முருகனே என்ன அலர்ந்தவர்க்குதவி, நினைந்தது முடிக்கும் ஆற்றலும் பெற்றுயர்வடைந்தான்" என்றும் இன்னும் பலவாறும் நாவலரின் பெருமையினைச் சிறப்பாகப் பாராட்டியுள்ளார். பருத்தித்துறை அத்தியடிச் சைவவாலிப சமாஜத்து ஆண்டுக் கொண்டாட்டத்தில் யாழ்ப்பாணப்புலவர் சரித்திரம் என்னும் பொருள் பற்றி உரையாற்றிய போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

"நல்லூர்த் தமிழ் மன்னர் மடித்தலத்திலிருந்து விளையாடித் தவத்தின் மிக்க முனிவருரைத்த ஞானமொழி கேட்டு மகிழ்வெய்தி வரகவிவாணரோடு உடனுறைந்து கழிமகிழ்வெய்திய தமிழ் யாழ்ப்பாணம் என்னும் நாடக மேடையில் தனது பூரண வனப்புத் தோன்ற நடித்த காலம் ஆறுமுகநாவலர் காலமாகும்."

(விவேகானந்தன் 1926. மார்கழி இதழ்)

இவ்வாறு ஆறுமுகநாவலர் மீது பெரு மதிப்புக் கொண்டதனாலேயே அவரைப் பின்பற்றிப் பல தொண்டுகள் செய்தார்.

இருவர் பெயரும் அறிவுத் தெய்வமாகிய முருகன் பெயராகவே அமைந்துள்ளன. நாவலரின் இயற்பெயர் ஆறுமுகன். விபுலானந்த அடிகள் துறவு பூணுமுன் கொண்ட பெயர் மயில்வாகனன். ஆறுமுகநாவலர் சைவமும், தமிழும், வளரத் தில்லையிலும் தொண்டாற்றியவர். சிதம்பரத்தில் அவரால் நிறுவப்பட்ட சைவ வித்தியாசாலையிலே தில்லை வாழ் அந்தணர்கள், மற்றைப் பிராமணர்கள் சைவாசிரியர்கள் முதலியோரின் பிள்ளைகள் கற்று வந்தனர். தில்லையின் எல்லையில் உள்ள திருவேட்களத்தில் விபுலானந்த நாவலர் சைவமும் தமிழும் வளரத் தொண்டாற்றினார். தில்லைக்கும் திருவேட்களத்துக்கும் இடையில் அமைந்திருக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றித் தமிழையும் சைவத்தையும் வளர்த்தவர் அடிகளார். அண்ணாமலைப்



இலவச விநியோகத்திற்காக

பல்கலைக் கழகத்தமிழ்க் கல்லூரி மண்டபத்தை ஆறுமுகநாவலரது திருவுருவப்படமும் விபுலானந்தரின் திருவுருவப் படமும் அலங்கரிக்கின்றன.

ஆறுமுகநாவலர் பன்னிரண்டாம் வயதுவரை ஆத்தி சூடி முதலிய நீதி நூல்களும், நிகண்டும் மனனம் செய்து இலக்கண நூல்களும், பிரபந்தங்களும் புராணங்களும் பயின்றார். அதன் பின் யாழ் மத்திய 'கல்லூரியில் ஆங்கிலம் கற்றார். ஆங்கிலம் கற்கும் காலத்திலே தமிழாசிரியரிடம் உயர் இலக்கண இலக்கியங்களைக் கற்றுக்கொண்டார். அதன் பின்னர் ஏழு ஆண்டுகள் பார்சிவலுக்குத் தமிழ் கற்பிக்கும் பண்டிதரானார்.அக்காலத்திலேயே பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்க உதவினார். மத்திய கல்லூரியில் கல்வி பயின்ற காலத்திலும் பின்னர் தமிழ்ப்பண்டிதராகக் கடமையாற்றிய காலத்திலும் கிறிஸ்தவர்கள் தமது சமயத்தை வளர்க்கும் முயற்சிகளை அறிந்து மனம் வெந்து தமது சமயத்தை வளர்க்க வேண்டிய ஆர்வம் அவரிற் பொங்கியெழுந்தது. இதே சூழலிலேதான் விபுலானந்த அடிகளையும் நாம் காண்கின்றோம். அவர் இளமையிலே திருக்குறள், நன்னூல், சூடாமணி முதலிய நூல்களைப் பயின்றதோடு புராணங்களையும் கற்றார். பின்னர் ஆங்கிலக் கல்வியைக் கல்முனை மெதடிஸ்த பாடசாலையிலும் மட்டக்களப்பு மைக்கேல் கல்லூரியிலும் பயின்றார். பயிற்றப்பட்ட ஆசிரியரான பின் மைக்கேல் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில் ஆறுமுகநாவலரும், விபுலானந்த நாவலரும் கிறிஸ்தவக் கல்லூரிகளில் ஆங்கிலக் கல்வி பயின்றவர்கள். விபுலானந்த அடிகளார், அக்கல்லூரிகளில் ஆசிரியராகவும் கடமையாற்றியவர். இந்தச் சூழல்தான் அவர்களை சைவசமயப் பணியில் ஈடுபடத் தூண்டுகோலாக இருந்தது. பண்டிதமணி அவர்கள் நாவலர் என்ற நூலில் ஆறாம் பக்கத்தில் கூறியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது. அவர் கூறுகின்றார்:

"பெயரளவில் திருவாவடுதுறை ஆதீனம் ஆறுமுகநாவலரைத் தந்ததேயாயினும், உண்மையை நோக்குமிடத்துப் பதினான்கு வருடக் கிறித்தவ சூழலே நாவலரை நமக்குத் தந்தது. ஆபிரிக்க தேசமே காந்தியை மகாத்மா ஆக்கியது. பதினான்கு வருடக் கிறித்தவ சூழல் அமையாதிருந்தால் ஆறுமுகநாவலர் என்றொருவர் யாழ்ப்பாணத்தில் இல்லை."

இது விபுலானந்த அடிகளுக்கும் பொருந்தும். சுவாமி சர்வானந்தரின் தரிசனமே விபுலானந்த அடிகளை எமக்குத் தந்ததாயினும் கிறிஸ்தவக் கல்லூரிகளில் அவர் பயின்றமையும் ஆசிரியராகக் கடமையாற்றியமையுமே அவரைக் கிழக்கிலங்கையின் ஆறுமுகநாவலராகவும் விஞ்ஞான அறிஞராகவும் எமக்குத் தந்தன.

இவ்விடத்து இருவருக்குமுள்ள வேற்றுமை ஒன்றினைக் குறிப்பிடவேண்டும். விபுலானந்த அடிகள் இலண்டன் கேம்பிரிட்ஜ் சீனியர் தேர்விலே தேர்ச்சி பெற்றார். பின்னர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து பயிற்றப்பட்ட ஆசிரியரானார்.சம்பத்திரிசியார் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராக இருந்த காலத்தில் இலண்டன் பி.எஸ்.சி. தேர்விலே தேர்ச்சியடைந்தார். மேலும் மதுரைத்தமிழ்ப் பண்டிதராகவும் விளங்கினார். அடிகளார் இவ்வாறு பெற்ற விஞ்ஞான, தமிழ்ப் பேறுகளே அவர் பிற்காலத்திற் பல்துறைப்பட்ட ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு வழிகோலிக்கொடுத்தன.

ஆறுமுகநாவலருக்குச் சமயம் உயிர்; மொழி உடல். உயிர் நிலைபெறுவதற்கு உடலை நல்ல முறையிற் பேணவேண்டும். எனவேதான் சமயத்தை வளர்ப்பதற்கு மொழி வளர்ச்சி அவசியமாயிற்று. மொழியைப் பேணுவதற்குக் கல்வியை விருத்தி செய்தல் இன்றியமையாததாகும். தமிழ்க்கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாவதற்குக் கருவிகள், முக்கிய தலந்தோறும் வித்தியாசாலை நிறுவுதலும் சைவப் பிரசாரம் செய்தலுமேயெனக் கண்டார்.



இலவச விநியோகத்திற்காக

கல்வி நிலையங்களிலே நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையறா முயற்சியும் உடையவர்களே ஆசிரியர்களாக நியமிக்கப்படவேண்டும் என நாவலர் வற்புறுத்தினார். எனவே, தமிழ்க் கல்விக்கு நாவலர் செய்த முதற்றொண்டு குருகுலமுறையில் ஒரு சிலருக்கு மட்டும் பயன்பட்ட கல்வியை யாவருக்கும் பயன்படக்கூடிய வகையில் பாடசாலைகளை நிறுவியதாகும். கல்வித்துறையில் அவர் செய்த இன்னொரு தொண்டு பாடத்திட்டத்தினை சூழலுக்கு ஏற்ப மாணவருக்குப் பயன்படும்படி அமைத்தமையாகும். அக்காலத்திற் பாடசாலைகளிற் படிப்பிக்கப்பட்ட நூல்கள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி முதலிய நீதி நூல்களும் சேந்தன், திவாகரம், எண்சுவடி முதலிய கருவி நூல்களுமே. சைவ சமய நூல்கள், அங்குக் கற்பிக்கப்படுவதில்லை. எனவே பாடசாலைகளில் இலக்கண இலக்கியங்களையும், சைவ சாத்திரங்களையும் கற்பிக்க வேண்டும் என வற்புறுத்தினர். பாடத்திட்டத்தில் நில நூல், மருத்துவம், சோதிடம், வேளாண்மை நூல், வணிகநூல், அரசநீதி, சிற்பநூல் முதலிய அறிவியற் கலைகளைப் புகுத்தியது அவர் செய்த பெருந்தொண்டாகும்.

ஆறுமுகநாவலரின் இத்திட்டங்கள் விபுலானந்த நாவலரைப் பெரிதும் கவர்ந்தன. அவரே கூறுகின்றார்:

“கல்விச்சாலைகள் பல நமது நாட்டிலிருக்கின்றன. இவற்றுட் பெரும்பாலான புறமதத்தாரால் நடத்தப்படுவன. புறமதத்தாருடைய முதல் நோக்கம் தமது மதத்தைப் பரப்புவது. அதற்குக் கல்விச்சாலைகள் கருவியாகவும் நிலைக்களமாகவும் இருக்கின்றன. ஆதலால் நமது சிறுவரை நமது சமய நெறியிற் பயிற்றுவதற்கு நமக்கென்று கல்விச்சாலைகள் வேண்டும் என்பதை முதன் முதல் எடுத்துக் கூறியவரும் அதற்காக வேண்டுவனவற்றைச் செய்தவரும் காவலரும் பாவலரும் புகழும் பெருந்தகைமையும் வாய்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரேயாவர். அவர் காட்டிய நன்முன்மாதிரியைக் கடைப்பிடித்தே நமது நாட்டிற் சைவத் தமிழ் வித்தியாலயங்களும் ஆங்கில வித்தியாலயங்களும் எழுந்தன. சமயக் கல்விக்குத் தமிழ்க்கல்வி இன்றியமையாதது. ஆதலாலே தமிழை வளர்ப்பவர் சைவத்தை வளர்த்தவராவர். இம் முயற்சி ஒருவராலாவதன்று. ஆயினும் ஒவ்வொருவரும் தம்மாலே அவமதிப்பையும் இழிப்புரையையும் பொருட்படுத்தலாகாது. உலகு புகழ்ந்தேத்தும் நாவலர் அவர்களுக்கே அவர்கள் காலத்தில் இருந்து சைவசமயிகள் செய்த இடையூறுக்கு அளவுண்டோ? நாவலரவர்கள் அக்காலத்தில் மனம் நொந்து கூறிய மொழிகளை ஈண்டுத்தருவோமாக.”

நாவலர் பார்சிவலுக்குத் தமிழ்ப்பண்டிதராக இருந்து கொண்டே 1846 இல் இருந்து தக்க மாணவருக்கு இரவிலும் காலையிலும் இலவசமாகக் கல்வி கற்பித்து வந்தார். அதன் பின் 1848 இல் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தார். இருபது ஆண்டுக் காலத்திற்கு மேலாக அரசாங்கப் பண உதவி கிடையாமலே பாடசாலையை நடத்தி வந்தார். தொடர்ந்து கொழும்புத்துறை, கோப்பாய், பருத்தித்துறை, ஏழாலை முதலிய இடங்களில் வித்தியாசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

நாவலரின் வழியிலேயே விபுலானந்த அடிகள் கிழக்கிலங்கையிற் பல பாடசாலைகளை நிறுவினார். திரிகோணமலை இந்துக்கல்லூரியும் கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயமும் இவரது முயற்சியாற் சிறந்த கல்வி நிலையங்களாகத் திகழ்ந்தன. காரைதீவு, கல்முனை, ஆரையம்பதி, கொக்கட்டிச்சோலை முதலிய இடங்களிலும் பாடசாலைகள் நிறுவப்பட்டன.

இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில் ஆறுமுகநாவலரின் அடிச்சுவட்டில் விபுலானந்த அடிகள் கல்விப்பணி ஆற்றியபோதும் அவரது கல்விப்பணிக்கு இராம கிருஷ்ணமிசனின் பண உதவியும் நிறுவனப் பலமும் இருந்தன. அவர் பணி இராம கிருஷ்ண சங்கத்தின் ஊடாகவே செயற்பட்டது. அரசாங்கத்தின் உதவியும் கிடைத்தது. ஆனால் ஆறுமுகநாவலரின் பணி தனிப்பட்ட

ஒருவரின் பணியாகும். அவரது பாடசாலையிற் கற்பித்த ஆசிரியர்கள் இலவசமாகவே கல்வி புகட்டினர்.

இலவசக் கல்வியின் தந்தையாகிய ஆறுமுகநாவலர் இருபது ஆண்டுகள் அரசாங்க அங்கீகாரம் இன்றியே எந்த நிறுவனத்தினதும் உதவியின்றித் தனித்துச் செயலாற்றினார். அதனாலேயே அவரது கல்விப் பணி யாழ்ப்பாணத்துடனும் சிதம்பரத்துடனும் நின்றுவிட்டது. விபுலானந்த அடிகள் துறவியாகமுன், மானிப்பாய் இந்துக்கல்லூரியின் தலைமையாசிரியராக 1920 ஆம் ஆண்டிலிருந்து கடமையேற்று, வடபகுதி மக்களின் சமயக் கல்விக்காக பெரிதும் உழைத்தார். அத்துடன் யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தை சீரான முறையில் அமைத்தார். அதன் பின்னர் திரிகோணமலை இந்துக்கல்லூரித் தலைமையாசிரியராகச் சிலகாலம் தொண்டாற்றினார். திரிகோணமலையிற் கல்விப் பணியாற்றிய பின் மத்திய மாகாணத்தில் ஒரு சைவ மகாசபையை நிறுவி அங்கும் சைவசமயக் கல்வியைப் பரப்பிய பெருமை அடிகளாருக்குரியது. இச்சபையின் முதலாவது ஆண்டு விழா 1927 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டபோது அடிகளாரே அவ்விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

1943 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு முதன் முதலாகப் பேராசிரியர் பதவியை அமைத்தபோது அதனை ஏற்கும்படி விடுக்கப்பட்ட அழைப்பினை ஏற்றுக் கொழும்பிலிருந்து அடிகளார் தமிழ்ப்பணி செய்து வந்தார். இவ்வாறு விபுலானந்த நாவலரின் கல்விப்பணி யாழ்ப்பாணம், திருக்கோணமலை, கண்டி. கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிற் செறிந்து ஈழம் முழுவதிலும் பரந்திருந்தது.

ஆறுமுக நாவலர் தமது காலத்துச் சூழலுக்கு ஏற்பத்தமது மாணவர் சிலருக்குக் கல்வி புகட்டி யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் கல்விப்பணி புரிந்தார். விபுலானந்த நாவலருக்குப் பரந்த அடிப்படையிலே பல துறைகளிலே தொண்டாற்ற அவர் பெற்ற பல திறப்பட்ட கல்வியும் இராமகிருஷ்ண மிசனின் வாய்ப்புக்களும் துணையாயிருந்தன. பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் மதுரைத் தமிழ்ப் பண்டிதராகவும் பி.எஸ்ஸி. பட்டதாரியாகவும் இவர் பெற்ற கல்வி அறிவும், மயிலாப்பூரில் 'இராம கிருஷ்ண விஜயம்' என்னும் தமிழ்ச் சஞ்சிகைக்கும்' வேதாந்த கேசரிக்கும் ஆசிரியராய் இருந்தமையும், 1939ஆம் ஆண்டில் இமயமலைச் சாரலிற் 'பிரபுத்த பாரதம்' என்னும் சஞ்சிகைக்கு ஆசிரியராக நியமிக்கப் பெற்றமையும், அண்ணாமலையிலும் இலங்கையிலுமுள்ள பல்கலைக் கழகங்களில் முத்தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றியமையும் கல்வி பற்றிய அவர் சிந்தனையை விசாலமாக்கின.

ஆறுமுகநாவலரும் விபுலானந்த நாவலரும் பெற்றிருந்த கல்வித்தகைமைகளும் அவர்கள் காலத்துச் சூழல்களும் தேவைகளும் இருவரது கட்டுரைகளிலும், நூல்களிலும் சொற்பொழிவுகளிலும் கவிதைகளிலும் காணப்படும் வேறுபாட்டை விளக்கவல்லன. ஆறுமுகநாவலருக்குச் சமயப்பணிக்கு தமிழ் ஒரு கருவி. பாதிரிமாரைப் பின்பற்றி மாணவர் தகுதிக்கு ஏற்ப அவர் நூல்களை எழுதினார். பாலபாடம், சைவவினாவிடை, பெரிய புராண வசனம், கந்த புராண வசனம், இலக்கணச் சுருக்கம் முதலியன சாதாரண மாணவருக்கென வெளியிடப்பட்டவை. நன்னூல் விருத்தியுரை, திருமுருகாற்றுப்படையுரை. திருக்குறளுரை, திருக்கோவையாருரை, தருக்க சங்கிரகம் போன்றவை உயர் கல்வி மாணவருக்கெனப் பதிக்கப்பட்டவை. திருக்கோவையார்ப் பதிப்பிலே தாம் அச்சிற் பதிக்கவிருக்கும் நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார். அவையாவன:- இறையனார் அகப் பொருளுரை, தொல்காப்பியம், சேனாவரையருரை, அகப்பொருள் விளக்கவுரை, வீரசோழியவுரை, சீவகசிந்தாமணியுரை, சிலப்பதிகாரவுரை, மணிமேகலை, வளையாபதி, கலித்தொகையுரை. புறநானூறு முதலியன. இதனை நோக்கும் போது, பலகலைக்கழகப் படிப்பிற்குரிய நூல்களையும் அவர் பதிப்பிக்க விருந்தார் என்பதும். அவர் பின்னுஞ் சில ஆண்டுகள் உயிருடன் இருந்திருந்தால் சாமிநாதையர் பதிப்பித்த நூல்களை அவருக்கு முன்பே வெளியிட்டு இருந்திருப்பார் என்பதும் தெளிவாகின்றன.

ஆறுமுகநாவலர் பிரசுரித்த கட்டுரைகளையும், துண்டுப் பிரசுரங்களையும் நோக்கும்போதும் அவை பிறமதப் பிரசாரத்தை மறுப்பதற்கும் சைவ சமய உண்மைகளை விளக்குவதற்கும் போலிச் சைவர்களைக் கண்டிப்பதற்குமே என அறியலாம். இந் நோக்கத்துக்கு அமையவே இவர் கையாண்ட உரை நடையும் பெரும்பாலும் யாவருக்கும் விளங்கக் கூடியதாகவும் தர்க்க ரீதியாகவும் அமைந்தது. மேலும் ஆறுமுகநாவலர் காலத்திற் பிறமொழிச் சொற்கள் பேச்சு வழக்கில் இருந்தமையினால் வேற்றுமொழிச் சொற்கள் பல அவராற் கையாளப்பட்டன. பெரிய புராண முன்னுரையில் ஆறுமுகநாவலரே தமது உரைநடை பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

“நிறைந்த கல்வி அறிவுடைய வித்துவான்களும் குறைந்த கல்வியறிவுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்தும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும் கல்வி அறிவில்லாத ஆடவர்களும் பெண்களும் பிறரைக் கொண்டு வாசிப்பித்து உணரும் பொருட்டும் பெரும்பான்மையும் இயற் சொற்களும் சிறுபான்மையும் அவசியமாகிய வட சொற்களும் பிரயோகிக்கப்படும் கத்தியரூபமாகச் செய்து, வாசிப்பவர்களுக்கு எளிதிலே பொருள் விளங்கும்படி பெரும்பான்மையும் சந்தி விகாரங்கள் இன்றி அச்சிற் பதிப்பித்தேன்.”

இம்முகவுரையிலிருந்தே நாவலரது உரைநடைத் தெளிவு, எளிமை, பிறமொழிக்கலப்பு என்பன பற்றி உணர்ந்து கொள்ளலாம்.

விபுலானந்த நாவலரின் நூல்களில் மொழிபெயர்ப்பு நூல்களாக ஐந்து காணப்படுகின்றன. அவை விவேகானந்த சுவாமிகளின் ஆக்கங்களின் தமிழ் மொழிபெயர்ப்புக்கள். அவரது இன்னொரு நூலாகிய மதங்கசூளாமணி நாடகத் தமிழ் நூல். அது ஆங்கில, வடமொழி நாடகங்களின் மொழிபெயர்ப்பாகத் தமிழ் நாடக இலக்கண நூலாக விளங்குவது. யாழ்நூல் அடிகளாரின் பல்லாண்டு ஆராய்ச்சியின் பயனாக வெளிவந்துள்ள தலைசிறந்த இசைவரலாற்று ஆராய்ச்சிநூல். அடுத்து விபுலானந்த நாவலரின் கட்டுரைகள் பல துறைப்பட்டவை. இவற்றை இசையாராய்ச்சிக் கட்டுரைகள், சமயத் தொடர்பான கட்டுரைகள், மொழியியல் ஆராய்ச்சிக் கட்டுரைகள், கல்விக் கொள்கைகள் பற்றிய கட்டுரைகள், அறிவியற்கட்டுரைகள், மறுமலர்ச்சிக் கருத்துடைய கட்டுரைகள், தலயாத்திரைக் கட்டுரைகள் என வகுக்கலாம். பெரும்பாலானவை இந்தியாவிலுள்ள இலக்கியத்தரம் வாய்ந்த சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன என்பதும், பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன என்பதும் நோக்கற்பாலன. உதாரணமாகச் சுதேசமித்திரன். செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், சரஸ்வதி, விவேகபோதினி, கலைமகள் போன்ற சஞ்சிகைகளைக் குறிப்பிடலாம். இவற்றில் அடிகளாரது உரைநடை இலக்கியச்சுவை பயப்பதாய், சில வேளைகளிற் செய்யுள் நடைபோல் அமைந்ததாய், பொருட்செறிவு, ஆற்றொழுக்கான போக்கு, தெரிந்தெடுத்தமைந்த சொற்கள் ஊடான விடய விளக்கம் என்பனவற்றைக் கொண்டதாய்க் காணப்படுகின்றது.

இருவரது சொற்பொழிவுகளிலும் ஒரு வேறுபாட்டைக் காணலாம். ஆறுமுக நாவலர் பெரும்பாலும் கோயில்களிலும், ஆதினங்களிலும் சமயசம்பந்தமாகவும் சமூக நலன் சம்பந்தமாகவும் பிரசங்கங்கள் செய்தார். இதற்கமையவே பிரசங்க நடையும் காணப்படுகின்றது. விபுலானந்த அடிகள் மதுரைத் தமிழ்ச்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், சைவசித்தாந்த சமாசம் போன்ற சங்கங்களிலும் பல்கலைக் கழகங்களிலும் இயல், இசை, நாடகம் பற்றியும் இலக்கியப் பொருள்கள் பற்றியும் சொற்பொழிவாற்றியிருக்கின்றார். இச் சொற்பொழிவுகள் இனிய செந்தமிழிற் பேராசிரியர்கள், மகா வித்துவான்கள், ஆராய்ச்சியாளர்கள் போன்றோர் கூடிய சபைகளில் இடம் பெற்றவை.

கவிதைத் துறையை நோக்கும்போது ஆறுமுகநாவலர் சமய சம்பந்தமான சில பாடல்கள் பாடிய போதும், கவிதையில் அதிகம் ஈடுபடவில்லையெனத் தெரிகின்றது. அவர் மேற்கொண்ட பணிக்குக் கவிதை தேவையானதாகவும் இருக்கவில்லை. விபுலானந்த நாவலர் முப்பத்திரண்டுக்கு மேற்பட்ட கவிதைகள் பாடியிருக்கின்றார். அவற்றுட் சில சமயம், இலக்கியம் பற்றிய கவிதைகள்,



இலவச விநியோகத்திற்காக

சில மொழி பெயர்ப்புக் கவிதைகள். பிறமொழிக் கவிதைகளை எடை குறையாமற் சுவை இனிது சொட்ட அடிகளார் மொழி பெயர்த்தும் கவிதை செய்துள்ளார். அவர் தாமாக யாத்த கவிதைகளிற் கவித்துவப்பொலிவும். கனிவும் செறிந்து காணப்படுகின்றன. அடிகளார் யாப்பினை நன்கு அறிந்தவர் என்பதும் எந்தக் கருத்தை எந்த யாப்பில் அமைக்க வேண்டுமென்பதை இயல்பாக அறிந்தவர் என்பதும் எந்தக் கவிதைகளினாற் புலனாகும். சுருங்கக் கூறின். விபுலானந்த நாவலர் தமது ஆக்கங்களில் ஒப்பியல் நோக்கிற் பழைமையையும், புதுமையையும் மேற்றிசைச் செல்வத்தையும் கீழைத்தேயப் பண்பாட்டையும் ஆழமாக ஆராய்ந்து, அவற்றிலே உயிர்த்துடிப்புடன் உள்ளவற்றை எடுத்துக் காட்டினார் எனலாம்.

நாவலர் இருவரையும் இன்னும் பல துறைகளில் ஒப்புநோக்க முடியுமெனினும். ஆறுமுகநாவலர் விபுலானந்த நாவலருக்கு எவ்வகையில் முன்மாதிரியாக இருந்தார் என்பதனையும் இருவரும் எவ்வகையில் வேறுபட்டனர் என்பதனையும் ஒரு குறிப்புக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்யலாம்.

ஆறுமுகநாவலர் 'நல்லூர்க் கோயில்' என்ற தலைப்பில் எழுதிய வீறு பொருந்திய கட்டுரையில் ஓரிடத்திற் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"இக்கோயில் யாருடையது? இக்கோயில் அதிகாரியுடையதா? சனங்களுடையதா? மேற்காட்டிய வகையினாலே சனங்களுடையது என்பது எல்லோருக்கும் தெரியுமே. வேறு சீவனோபாயம் ஒன்றுமின்றி இக் கோயிலதிகாரியாகிச் சனங்கள் கைப்பொருள் கொண்டு சீவிக்கின்றவர் கடவுளுக்கு மாத்திரமோ. அச் சனங்களுக்கும் வேலைக்காரனன்றோ?"

இலங்கை நேசன் இரண்டாம் புத்தகம் இலக்கம் ஆறில் "வெகுசனத் துரோகம்' என்னும் தலைப்பில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"உதயதாரகை என்னும் பத்திரிகை இவ்வளவு காலமும் நிலைபெற்றது எதனாலே? சனங்களுடைய பணத்தினாலே.... வெகுசனத்துரோகியாகிய உதயதாரகையை இப்பொழுது சனம் வாங்குகிறார்களா?

இவ்விரு பகுதிகளையும், விபுலானந்த நாவலர் இராம கிருஷ்ண விஜயத்திலே, 'தமிழ் மொழியின் தற்கால நிலைமையும் தமிழரின் கடமையும்' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியோடு ஒப்பிடலாம். அப்பகுதியாவது:

சென்னைச் சர்வகலாசாலை சுதேச பாஷைகளைப் புறக்கணித்து வருகின்றதென்பது மறுக்கொணா உண்மையே. சர்வகலாசாலை ஏற்பட்டிருப்பது எதற்கோ? ஏழைச் சனங்களிடமிருந்து பெறுகின்ற வரிப்பணத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாய்களைச் சர்வகலாசாலைக்குக் கொடுத்து வருவது என்ன காரணத்துக்காகவோ? சர்வகலாசாலையார் அளிக்கின்ற பட்டங்கள் தம் மொழி மறந்து பிறமொழியிற் பிதற்றுகின்ற பேதை மக்களைக் குறியீடு செய்வதற்குரிய அடிமை முத்திரையாமோ? அன்றேல் அவை அறிவு நிறை மாந்தருக்குக் கல்விக் கழகத்தினர் கொடுத்துதவும் அறிவு முத்திரையாமோ? என்றின்னோரன்ன துறைகளை ஆராய்ந்து நோக்குவது தேசாபிமானமுடைய பெரியார் மேற்பொறுத்த கடனாகும்."

இருவரும் பொதுசனத்தின் சார்பிலே பேசுகிறார்கள். ஆனால் ஆறுமுகநாவலர் சாடியது நல்லூர்க் கோயிலையும் உதய தாரகை என்னும் பத்திரிகையையுமே. விபுலானந்த நாவலர் போர்தொடுத்தது சென்னைச் சர்வகலாசாலையுடன். நாவலர் இருவரும் இப்பகுதிகளில் கையாண்ட மொழிநடையிலும் வேறுபாடுண்டு.

*- பேராசிரியர் சு. வித்தியானந்தன் -*